# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முறையீட்டு மனு எண்.331/2017/பே.2**
**ஆணை எண். 52 /நாள். 16–03–2018**

திரு த. பால் கிருபாகரன்,
எண்.2–F.ஜீவவழி சர்ச்,
மில் ரோடு,
நெய்க்காரப்பட்டி – 624615
பழனி தாலுாக்கா,
திண்டுக்கல் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
நெய்க்காரப் பட்டி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். — எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு த. பால் கிருபாகரன், ஜீவ வழி சர்ச், மில் ரோடு, நெய்க்காரப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் 10.03.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 331/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான் மேற்கண்ட முகவரியில் குடியிருபபதாகவும், திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி பேரூராட்சி நிர்வாகத்தின் அறிவிப்பின் பேரில் 12.01.2011 அன்று ரூ. 100/–க்கான வரைவோலை எடுத்து முறையாக மனு செய்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், கடந்த 19.01.2015 ல் இது குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் ஆகியோருக்கு மேல் முறையீடு செய்ததாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் இது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில், நீதிப் பேராணை எண். 2862/2015 ன்படி வழக்கு தொடர்ந்ததாகவும், இவ்வழக்கில் மதுரை உயர்நீதிமன்றக் கிளை தனது 03.03.2015ம் நாளிட்ட ஆணையில் ஒரு மாத காலத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டதாகவும் தெரிவித்து, மேற்படி நீதிமன்ற தீர்ப்பின் நகலினையும் இணைத்து

சமர்ப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்து, தான் மேற்படி நகலை இணைத்து பேரூராட்சி நிர்வாகத்திற்கு 31.03.2015ல் மனு செய்ததாக தெரிவித்துள்ளார், பேரூராட்சி நிர்வாகம் தற்போதைய வறட்சியின் காரணமாக குடிநீர் குழாய் இணைப்பு கொடுப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என பதில் தெரிவிக்கப்பட்டதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால், பேரூராட்சி நிர்வாகம் அது சமயத்தில் ஒரு சில நிறுவனங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார். இதனிடையில் 21.02.2016ல் நல்ல மழை பொழிந்த நிலையில் தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மீண்டும் மனு செய்ததாகவும் ஆனால் மேற்படி பேரூராட்சி நிர்வாகத்தினர் நீதிமன்றம் உத்திரவிட்டும் தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்காமல், புதியதாக தொடங்கப்பட்ட கிங் பார்க் மற்றும் ஸ்ரீரேணுகாதேவி மேல் நிலைப் பள்ளி ஆகிய நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியுள்ளதாகவும், தெரிவித்துள்ளார். பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் மேற்படி பேரூராட்சிக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் எனவும் இது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறும் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.05.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு குறித்தான விளக்கத்தினை சமர்ப்பிக்கக் கோரி நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் தனது 30.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் கடந்த 05.10.2017 அன்று நெய்க்காரப்பட்டி பேரூராட்சியில் தனக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் நடவடிக்கையாக அதற்கான வைப்புத் தொகை ரூ 10,000/- பெற்றுக் கொண்டு ரசீது வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனது வீடு மெயின் ரோட்டில் உள்ளதால் நெடுஞ்சாலையினை கடந்து குடிநீர் இணைப்பு வழங்கவேண்டியுள்ளதால், நெடுஞ்சாலைத்துறையின் அனுமதி பெற மனு கொடுக்கப்பட்டு, பரிசீலினையில் உள்ளதால் கால தாமதம் ஏற்படுவதாக பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளதாகவும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் நெடுஞ்சாலைத்துறையிடமிருந்து மேற்படி சாலை குறுக்காக குடிநீர் குழாய் பதிக்க அனுமதி பெறப்பட்டவுடன் குடிநீர் இணைப்பு வழங்குவதாக பேரூராட்சி செயல் அலுவலர் உறுதி அளித்துள்ளதால் தனது வழக்கினை வாபஸ் பெறுவதாக முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூற்றினை உறுதி செய்யும் வண்ணம் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 389/2017/ நாள் 15.12.2017ல் தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நெய்க்காரப்பட்டி பேரூராட்சி பகுதியில் இருக்கும் திரு டி.பால்கிருபாகரன் குடிநீர் இணைப்பு வேண்டி அளித்துள்ள வழக்கினைத் தொடர்ந்து மேற்காணும் இணைப்பிற்கு செ.சீ.எண். 210/05.10.2017 அன்று முன் வைப்புத் தொகையாக ரு.10,000/- மற்றும் செ.சீ.எண் 213/09.10.2017ல் சென்டெஜ் கட்டணமாக ரூ 2,700/-ம் செலுத்தியுள்ளதாகவும், மேற்படி நபருக்கு குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தனது விளக்கக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே முறையீட்டு மனுதாரரின் 30.10.2017ம் நாளிட்ட கடிதம், மற்றும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 15.12.2017ம் நாளிட்ட விளக்கக் கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களை இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்தது. முறைமன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து முறையீட்டு மனுதாரருக்கு உரிய பதில், பேரூராட்சி நிர்வாகத்தால் அளிக்கப்பட்டுள்ளதாலும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாலும், தனது முறையீட்டினை திரும்ப பெற்றுக் கொள்வதாக முறையீட்டு மனுதாரரே தனது 30.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதையும் கருதி இம்முறையீடு குறித்து மேல் நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் செயல் அலுவலர் முறையீட்டு மனுதாரரது கோரிக்கையினை நிறைவேற்றிட சட்ட /விதிமுறைகளின்படி உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டிட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 –ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

சென்னை–600 032

**பெறுநர்**

1.திரு த. பால் கிருபாகரன்,
எண்.2–F.ஜீவவழி சர்ச்,
மில் ரோடு,
நெய்க்காரப்பட்டி – 624615
பழனி தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
நெய்க்காரப்பட்டி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**செயலாளர்**